
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1310**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

**175**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எஸ்.கே.வடிவேல் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# தொண்டர்களின் தோழன் எஸ்.கே.வடிவேல்!

ஓவியம் : ரவி பேலட்



*2018-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் மறைவெய்தியபோது, உலகத் தமிழர் நெஞ்சமெல்லாம், அவர் உடல் வைக்கப்பட்டிருந்த சென்னை ராஜாஜி அரங்கத்திலேயே இருந்தன. இலட்சக்கணக்கான உடன்பிறப்புகளும் தொண்டர்களும் கொந்தளிப்புடன் குழுமியிருந்த கூட்டத்தில், கலைஞரைப் போராட்டத்துக்கு அழைக்க வந்த நிர்வாகியாகப் பழைய நினைவுகளிலேயே வாழ்ந்த உடன்பிறப்பு ஒருவர், அனைவரது கண்களையும் கலங்கவைத்தார். அந்த மூத்த முன்னோடி, தொட்டியம் எஸ்.கே.வடிவேல். கலைஞரின் வயதையொத்த, அவரது நண்பராக, ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழகத்தின் தூணாக விளங்கி, காவிரிப் படுகைப் பகுதிகளில் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களை அரவணைத்துச் சென்றவர்.*

*1926-ஆம் ஆண்டு, திருச்சி மாவட்டம் தொட்டியம் சீலைப்பிள்ளையார் கிராமத்தில் பிறந்தவர், எஸ்.கே.வடிவேல். காட்டுப்புத்தூர் உயர்நிலைப் பள்ளியில் அன்றைய 9-ஆம் வகுப்பு வரை பயின்றவர். இளம் வயதிலேயே பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, பின்னர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் தன்னைத் திராவிட முன்னேற்றக் கழகப் பணியில் முழுமையாக இணைத்துக்கொண்டவர். சீலைப்பிள்ளையார்புதூர் கிராமத்தில் கிளைக்கழகத்தைத் தொடங்கி, முதன்முதலில் கழகக் கொடியைப் பறக்க விட்டர் எஸ்.கே.வடிவேல்.*

*கழகப் பணிகளில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு, ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட அளவில் அவரது பணிகளைக் கொண்டு சேர்த்தது. அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், இன்றைய கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளையும் உள்ளடக்கியிருந்த காலம். அந்தப் பரந்த நிலப்பரப்பில், கழகத்தை அடிமட்டத்தில் வளர்த்தெடுத்த முக்கியமான முன்னோடிகளில் எஸ்.கே.வடிவேலும் ஒருவர்.*

### காவிரிக் கரையோரம்

*1956-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞருடன் நெருக்கமான நட்பு கொண்டவர். 1963-ஆம் ஆண்டு, விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றுள்ளார். 1965-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் திருச்சி, முசிறி, தொட்டியம் பகுதிகளில் கழகத் தோழர்களை ஒருங்கிணைத்து போராட்டங்களை நடத்தியவர். 1986-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் அவரது பங்கு நினைவுகூரத்தக்கது.*

*திருச்சி மாவட்டக் கழக முன்னோடியாகச் செயல்பட்ட காலங்களில், காவிரிக் கரையோர கிராமங்களுக்குள் கழகத்தைக் கொண்டு சென்றார். 1959-ஆம் ஆண்டில், காட்டுப் புத்தூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் தலைவராகப் பொறுப்பேற்று, மக்களிடம் கழகத்தினரின் பணியைக் கொண்டுசேர்த்தார். 1964-ஆம் ஆண்டில், சீலைப்பிள்ளையார்புதூர் கிராமத்தின் ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றார்.*

*1967-ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா வெளியிட்ட கழக வேட்பாளர்கள் பட்டியலில், தொட்டியம் சட்டமன்றத் தொகுதிக்கு இடம்பெற்றவர் எஸ்.கே.வடிவேல். அந்தத் தேர்தலில் 40 சதவிகித வாக்குகளுடன் பெரு வெற்றி பெற்று, கழகம் அமைத்த முதல் சட்டமன்றத்தில் இடம்பெற்றார். அவரது செல்வாக்கு, 1971-ஆம் ஆண்டு தேர்தலிலும் தொட்டியம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு, 51 சதவிகித வாக்குகளுடன் வெற்றிபெற்றார். 1977-ஆம் ஆண்டு தேர்தலிலும் அதே தொகுதியில் போட்டியிட்டாலும், அப்போதைய சூழலில் வெற்றிபெற முடியவில்லை. ஆனால், எஸ்.கே.வடிவேலின் பணி, தேர்தல் வெற்றிகளை மட்டுமே கொண்டதல்ல என்பதை மக்கள் அறிவர்.*

*தொட்டியம், முசிறி பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் காவிரியும் அதன் நீர்ப்பாசனமும் நேரடியாகத் தொடர்புடையவை. அந்த மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்த தடுப்பணை அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை, அண்ணாவிடமும் கலைஞரிடமும் தொடர்ந்து வலியுறுத்தியவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதும் மாவட்டச் செயலாளராக இருந்தபோதும், தனது பகுதி மக்களின் பிரச்சினையைத் தலைமையின் கவனத்துக்குக் கொண்டு செல்வதை அவர் நிறுத்தவில்லை. 2008-ஆம் ஆண்டில், மாயனூர் தடுப்பணைக்கான ஆரம்பகட்டப் பணிகளைக் கலைஞர் தொடங்கியபோது, "மக்களின் தேவையை உணர்ந்து செயல்படுவதில், எஸ்.கே.வடிவேல் போல ஒரு சிலரைத்தான் பார்க்க முடியும்" என்று கலைஞர் பெருமையுடன் குறிப்பிட்டார்.*

### போராட்டத்துக்கு அழைக்க

*கழகத்தின் தேர்தல் பாதைக்குக் கட்டியம் கூறிய, 1956-ஆம் ஆண்டு திருச்சி தேர்தல் சிறப்பு மாநாட்டில், பேரறிஞர் அண்ணாவின் கவனம் ஈர்த்த இளைஞர், மாநில உரிமை அரசியலில் முக்கியமான திருப்பமாக அமைந்த 1970-ஆம் ஆண்டு திருச்சி மாநாட்டின்போது, மாவட்டக் கழகப் பொறுப்பில் இருந்த எஸ்.கே.வடிவேல், அன்பில் தர்மலிங்கம் உள்ளிட்ட கழக முன்னோடிகளுடன் இணைந்து அதைச் சிறப்பாக நடத்திக் காட்டினார்.*

*'மிசா' நெருக்கடி காலத்தில், கழகத்தின் மீது கடுமையான அடக்குமுறை தொடர்ந்த போது, திருச்சி மண்டலத்தில் தொண்டர்களை ஒருங்கிணைத்து, கழகத்தின் கட்டமைப்பைத் தக்கவைக்கப் பாடுபட்ட மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்தார்.*

*அவரைப் பற்றி நினைவுகூரும்போது, மாவட்டக் கழகத்தினர், 'எளிமையே அவரது அடையாளம்' எனக் கூறுகின்றனர். எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் மாவட்டப் பொறுப்பில் இருந்தபோதும் தொட்டியம் பகுதி மக்களிடமிருந்து தன்னை விலக்கிக் கொள்ளாதவர். மக்களின் தேவைக்காக எப்போதும் சந்திக்கக்கூடிய மனிதர் என்ற நம்பிக்கையை மக்களிடம் உருவாக்கியவர். அதனால்தான் அவரைத் 'தொண்டர்களின் தோழன்' என்று புகழ்ந்துரைத்தார் கலைஞர்.*

*குளித்தலையில் கலைஞர் போட்டியிட்ட போது, கலைஞருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தவர், இறுதிக்காலம் வரை அந்தத் தோழமையுடனே அணுகினார். உடல்நலக் குறைவு காரணமாக, கழகப் பணிகளைக் குறைத்துக்கொண்டிருந்த நிலையில், நினைவுதப்பும் நோயும் அவரை வாட்டியது. அந்த நிலையுலும் கழகப் பணி, போராட்ட வாழ்க்கையே அவரது நினைவுகளில் இருந்தன. அப்படியான நிலையில்தான் 2018-ஆம் ஆண்டு கலைஞர் மறைந்தபோது, வயது முதிர்ந்த நிலையிலும் சென்னைக்கு வந்து, கலைஞரின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார். கலைஞர் இறப்பினை உணர முடியாத நிலையில், 'தொட்டியம் பகுதி மக்களின் அணைப் பிரச்சினையைப் பற்றி கலைஞரிடம் பேச வேண்டும்' என்று கூறி, கழகத்தினரை மேலும் நெகிழவைத்தார்.*

*'கழகத்தின் போராட்டம், கலைஞரைப் பார்க்க வேண்டும்' என்கிற நினைவுகளை மட்டுமே கொண்டிருந்த எஸ்.கே.வடிவேல் அவர்கள், 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், தனது 94-வது வயதில் இயற்கை எய்தினார். மாவட்டக் கழகத்தினர், திரளாக வந்து மரியாதை செய்ததுடன், கழகத் தலைவரின் இரங்கல் அறிக்கையும் அவரது உழைப்பைப் போற்றியது. ஒவ்வோர் ஆண்டும் அவரது நினைவினைப் போற்றும் கழக உடன்பிறப்புகள், அவரைப்போல உழைக்கவும் உறுதிமொழி ஏற்கின்றனர்.*

> **"கலைஞர் இறப்பினை உணர முடியாத நிலையில், 'தொட்டியம் பகுதி மக்களின் அணைப் பிரச்சினையைப் பற்றி கலைஞரிடம் பேச வேண்டும்' என்று கூறி, கழகத்தினரை மேலும் நெகிழவைத்தார்."**

**...துடிக்கும்**

## "வாட் ப்ரோ? ராங் ப்ரோ!"

'சட்டமன்றத்தில் முதல்வர் விஜய், அவரின் துறை சார்ந்த கேள்விகளுக்குப் பதில் தராமல், சட்டமன்றக் கூட்டம் நடக்கும் போதே கிளம்பிச்சென்றது, மோசமான செயல். அதைக்கூட, ஏதோ அவசர வேலை காரணமாகச் செல்வதாகக் கணக்கில் கொள்ளலாம். ஆனால் போகும்போது, "நான் மண்டே வந்து பதில் சொல்றேன். எல்லாரும் ஒரு ப்ராமிஸ் பண்ணணும், நான் பதிலளிக்கும்போது யாரும் எழுந்து ஓடிவிடக் கூடாது" என்று நக்கலடித்துவிட்டு, விறுவிறுவென சபையை விட்டு ஓடியிருப்பதைப் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது'. என காட்டமாக விமர்சனம் செய்துள்ளார் பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன். அவரது பதிவில்,

'முதல்வர் விஜய் சொன்னதுபோல் எதிர்க்கட்சிகள் தரப்பில், யார் ஓடுகிறார்கள்? சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கேள்விகளையும் எழுப்புகிறார்... கடந்தகால ஆட்சி குறித்த கேள்விகளுக்குப் பதில்களையும் தருகிறார்... கே.என்.நேரு, சேகர்பாபு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், செந்தில்பாலாஜி, தங்கம் தென்னரசு போன்றவர்களெல்லாம், தாங்கள் முன்பு வகித்த துறை சார்ந்த கேள்விகளுக்கு, அவ்வளவு தெளிவாகப் புள்ளிவிவரங்களுடன் பதில் தருகிறார்கள். இவர்களையெல்லாம் ஓடுகிறார்களென்று நக்கலடிக்கிறாரா விஜய்? இதுவா பொறுப்பான முதல்வரின் பேச்சு?

ஓர் ஆக்கபூர்வமான முதல்வரென்றால், மற்ற கட்சியினரின் கேள்விகளுக்கு உரிய பதிலைத் தரவேண்டும். பத்திரிகையாளர்களை இயல்பாகச் சந்திக்க வேண்டும். அதுதான் வெளிப்படைத்தன்மையான அரசு. அதுதான் ஜனநாயகத்தன்மை. ஆனால் இங்கே, விஜய் என்ற 'ஹீரோ மெட்டீரியலை' பொத்திப் பாதுகாக்கும் வேலையைத்தான் தொடர்ந்து செய்துவருகிறார்கள்.

ஹீரோ இமேஜுக்கு டேமேஜும் ஆகக்கூடாது... யாரும் கேள்வியும் கேட்கக் கூடாதென்றால், புத்திசாலித்தனமாக ஒரு வேலை செய்யலாம். முதல்வரின் வசமிருக்கும் காவல், உள்துறை, பொது நிர்வாகம் மற்றும் மக்கள் நலம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் இந்திய வனப் பணி, நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மற்றும் குடிநீர் வழங்கல், மகளிர், குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன், இளைஞர் நலன், வறுமை ஒழிப்பு உள்ளிட்ட துறைகள் அனைத்தையும் மற்ற அமைச்சர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டு, இலாக்கா இல்லாத முதல்வராக இருந்துகொள்ளலாம்.

யார் கேள்விக்கும் பதில் தரவேண்டிய அவசியமிருக்காது! ஜாலியாக அரசு விழாக்களில் பங்குபெறலாம். அப்படியே கிராமங்களுக்குச் சென்று பாட்டிகளுக்கு, கூலிங் கிளாஸ், புடவை, வைரமூக்குத்தின்னு பரிசளித்து, ரீல்ஸ் போடலாம்! யாரும் கேள்வி எழுப்பவே முடியாது! அதை விடுத்து, இப்படி சட்டமன்றத்தில் மற்றவர்களை நக்கலடிப்பதெல்லாம் வாட் ப்ரோ? ராங் ப்ரோ!' எனக் கேட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஜெ.சத்தியம்



### பிறந்தநாள் வாழ்த்து!

2019-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் நாள், எனது பிறந்தநாளை முன்னிட்டு, அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தளபதியார் அவர்களைச் சந்தித்து வாழ்த்துகள் பெற்றேன். உடன், ஆரணி பேரூர் கழகச் செயலாளர் வெங்கடேசன் மற்றும் நிர்வாகிகள் இடம்பெற்றுள்ளனர்.

**- ஜெ.சத்தியம், 8-வது வார்டு கழகச் செயலாளர், ஆரணி பேரூர், சோழவரம் (வ) ஒன்றியம், திருவள்ளூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பாசறைகள் அமையட்டும்!

1978-ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில், கழகத்தின் ஒன்றிய நகர, நகரிய அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல்களில் பலத்த போட்டி நிலவியது. கழகம் ஆட்சியைப் பிடிக்க முடியாமல், தோல்வியைத் தழுவிய நிலையிலும், 'கழகம் ஒழிந்துவிட்டது' என ஏடுகளும் எதிர்க்கட்சிகளும் வர்ணித்த நிலையிலும், அமைப்புத் தேர்தல்களில் பொறுப்புக்கு யார் வருவது என்கிற போட்டி கடுமையாக இருந்தது. அப்போது, 'மாவட்டப் பாசறைகள் அமையட்டும்' எனக் கழகத்தினருக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900